## *2*

# "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை . . . மகிமைப்படுத்துங்கள்"

## [மத்தேயு 5:13-16]

இந்தப் பாடமானது உங்களின் மதிப்பு மிகுந்த மற்றும் முக்கியமான உடமைகளில் ஒன்றைப் பற்றியதாக உள்ளது. இது ஒவ்வொருவரும் கொண்டுள்ள ஒன்றாக உள்ளது. நான் இதைக் கொண்டிருக்கிறேன், மற்றும் நீங்களும் இதைக் கொண்டிருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் வேறு எதைக் கொண்டிருந்தாலும் இல்லை என்றாலும், இதைக் கொண்டுள்ளனர். நீங்கள் இதை விற்றாலும்கூட, இன்னும் இதைக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் மரித்த பின்பு இது வாழ்கிறது. நான் உங்கள் *செல்வாக்கைப் பற்றிப்* பேசுகிறேன்.

பல வசனப்பகுதிகள் நேர்மறையான செல்வாக்கிற்கான அவசியம், நல்ல உதாரணமாக இருக்க வேண்டியதன் முக்கியத்துவம் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றன.[1] இயேசுவின் அடிச்சுவட்டில் நாம் நடக்க வேண்டும் என்பதற்காக, அவர் நமக்கு ஒரு உதாரணத்தை விட்டுச் சென்றார் (1 பேதுரு 2:21; காண்க யோவான் 13:5). பவுல் எப்போதுமே ஒரு நல்ல உதாரணமாக இருக்க முயற்சி செய்தார் (காண்க பிலிப்பியர் 3:17), மற்றும் அவர் அதையே செய்யும்படி தீமோத்தேயுவையும் தீத்துவையும் ஊக்குவித்தார் (1 தீமோத்தேயு 4:12; தீத்து 2:7). விசுவாசிகளாக இருக்கும் மனைவியர்கள், அவிசுவாசிகளாக இருக்கும் தங்கள் கணவர்களை, தங்கள் விசுவாசநிறைவின் உதாரணங்களினால் ஆதாயப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் (1 பேதுரு 3:1, 2). இருப்பினும் செல்வாக்கின் வல்லமை மற்றும் நோக்கம் ஆகியவற்றைப் பற்றி இந்தப் பாடத்திற்கான வேதவசனப் பகுதியைப் போல வேறு எந்த வசனப்பகுதியும் இவ்வளவு விரிவாகப் பேசுவதில்லை.

முந்திய பாடத்தில் நாம், பாக்கியங்களைப் பற்றிச் சுருக்கமாக ஆய்வுசெய்தோம் (5:3-12). இயேசுவின் அந்தக் கூற்றுகள், பரலோக இராஜ்யத்தினுடைய குடிமக்களின் அடிப்படைப் பண்புகளை நமக்குத் தருகின்றன. நான் ஒரு இளைஞனாக இருந்தபோது, அமெரிக்காவில் உள்ள பாய்ஸ் ஸ்கவுட் என்ற அமைப்பில் நான் ஒரு உறுப்பினனாக இருந்தேன். நாங்கள், ஸ்கவுட்டில் இருக்கும் பையன் நம்பிக்கைக்கு உகந்தவனாக, நாணயமானவனாக, உதவிசெய்பவனாக, நட்புறவு உடையவனாக, நேர்மையாளனாக, இரக்கமுள்ளவனாக, கீழ்ப்படிதல் உள்ளவனாக, நட்புறவு உடையவனாக, சிக்கனமானவனாக, வீரமிக்கவனாக, சுத்தமானவனாக

*மற்றும் பயபக்தி உடையவனாக இருக்க வேண்டும் என்று அறிவிக்கிற பாய்ஸ் ஸ்கவுட்டின் விதிகளைக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. பாக்கியங்கள் என்பவை "பரலோகக் குடிமகனுக்கான விதி" என்று நினைக்கப்படலாம்: பரலோக ராஜ்யத்தின் குடிமகன் ஆவியில் எளிமையுள்ளவராக, தமது பாவங்கள் பற்றித் துயரப்படுகிறவராக, தேவனுக்கு இணங்குபவராக, தேவனுடன் சரியாக இருக்க விரும்புபவராக, பிறர்மீது இரக்கம் உள்ளவராக, இருதயத்தில் சுத்தமுள்ளவராக, தேவனுடனும் மற்றவர்களுடனும் சமாதானம் கொண்டிருக்க முயற்சிப்பவராக மற்றும் துன்புறுத்தப்படும்போது கூட அகம் மகிழ்பவராக இருக்கிறார்.[2]*

*கிறிஸ்துவினுடைய இராஜ்யத்தின் குடிமகனுடைய பண்புகளைப் புரிந்து உணர்ந்துகொண்ட பின்பு நாம், "இந்தப் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டியதன் கருத்து என்ன?" மற்றும் "இவ்வகையான தனிநபரின் இலக்கு அல்லது சமயப்பணி என்ன?" என்பவற்றைப் போன்ற கேள்விகளைக் கேட்கலாம். அந்தக் கேள்விகளுக்கு நமது தற்போதய வசனப்பகுதி பதில் அளிக்கிறது: பட்டியலிடப்பட்டுள்ள பண்புகளைக் கொண்ட தனிநபர்கள், "பூமிக்கு உப்பாக" மற்றும் "உலகத்திற்கு வெளிச்சமாக" இருக்கின்றனர்; மற்றும் அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும், பரலோகத்தில் இருக்கிற அவர்களுடைய பிதாவுக்கு மகிமையாக இருக்கும்.*

*இந்தப் பாடத்தில் நாம், முதலில் மத்தேயு 5:13-16 என்ற நமது வேதபாட வசனப்பகுதியை ஆய்வு செய்வோம். பின்பு நாம் யாவரும் கற்றுக்கொள்வதற்கு அவசியமான பல பாடங்களைப் பட்டியலிடுவோம்.*

## *வேதபாட வசனப்பகுதியை உற்றுநோக்குதல் (5:13-16)*

***பூமிக்கு உப்பு (வசனம் 13)***

*இயேசு, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறித் தொடங்கினார் (வசனம் 13அ). 13 முதல் 16 வரையிலான வசனங்களில் அவர், பழங்கால மற்றும் நவீனகால உலகங்கள் இரண்டிற்கும் பொதுவான இரு பொருட்களைப் பற்றிய கருத்தைப் பயன்படுத்தினார். இவ்விரு பொருட்களும் வாழ்விற்கு அவசியமானவையாக உள்ளன. ரோமர் அரசவையில் இருந்த பிளீனி (கி.பி. 62-இ 115), "உப்பு மற்றும் சூரிய வெளிச்சம் ஆகியவற்றைப் போன்று அதிகம் பயன்நிறைந்தவை வேறெதுவும் இல்லை" என்று எழுதினார்.[3]*

*இயேசுவின் நாட்களில், உப்பு பல பயன்களைக் கொண்டிருந்தது. அது பணிக்கு ஊதியமாகத் தரப் பயன்படுத்தப்பட்டது. அது சில மருந்துகளில் பகுதிக்கூறாக இருந்தது மற்றும் பனிக்கட்டியை உருக்கப் பயன்படுத்தப்பட்டது. அது லேவியத்துவப் பலிகளில் உள்ளடக்கப்பட்டது (லேவியராகமம் 2:13). "உப்பு 14,000க்கும் அதிகமான பணிகளைக் கொண்டுள்ளது என்று கலைக்களஞ்சியங்கள் கூறுகின்றன."[4] இருப்பினும் இயேசு, உப்பின் பின்வரும் இரண்டு அடிப்படைப் பணிகளையே தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர்: சுவையூட்டுதல் மற்றும் பாதுகாத்தல்.*

*நம்மில் பெரும்பான்மையானவர்கள் நமது உணவிற்கு ருசியூட்ட உப்பைப் பயன்படுத்துகிறோம். உப்பு (அல்லது ஒரு உப்புப்பதிலி) இல்லாத நிலையில், சில உணவுகள் சப்பென்று இருக்கின்றன. யோபுவின் புத்தகத்தில் நாம், "ருசியில்லாத*

பதார்த்தத்தை உப்பில்லாமல் சாப்பிடக்கூடுமோ ... ?" என்று வாசிக்கிறோம் (6:6). பவுல் தமது வாசகர்களுக்கு "உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக" என்று அறைகூவல் விடுக்கையில், உப்பின் சுவையூட்டும் பண்பைப் பற்றிக் குறிப்பிட்டார் (கொலோசெயர் 4:6அ).

கிறிஸ்துவின் சீஷர்கள் பூமிக்கு உப்பாக இருக்கின்றனர் அவர் கூறியபோது, அவர் தம்மைப் பின்பற்றுபவர்களைப் பற்றிப் பாராட்டுரையையும் பூமியைப் பற்றி மதிப்புக் குறைவான குறிப்பையும் கூறினார். இயேசு இல்லாமல் பூமியின்மீது வாழ்வு மந்தமானதாக, சுவையற்றதாக மற்றும் சலிப்புள்ளதாக இருக்கிறது. கிறிஸ்தவரல்லாத பலர் ஒரு செயலில் இருந்து மற்றொரு செயலுக்குத் துரிதகதியில் சென்று சிந்திக்க நேரம் எடுத்துக் கொள்ளாதிருக்கும் நிலையில், தங்கள் வாழ்வின் வெறுமை நிலையைப் பற்றி அறிவதில்லை. ஒருநாளிலே, சுகவீனத்தினால் அல்லது மரணம் அணுகுவதினால் தங்கள் செயல் வேகங்களை மட்டுப்படுத்தும்படிக் கட்டாயப்படுத்தப்படும்போது, அவர்கள் தங்கள் இருப்பின் அர்த்தமற்ற தன்மையை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இயேசுவுடனான சரியான உறவுதான், அவர்கள் வாழ்விற்கு உண்மையான மற்றும் நிலையான உற்சாகத்தைக் கொண்டு வர முடியும்.

இருப்பினும் கிறிஸ்து, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறியபோது அவர் அனேகமாக, உப்பின் பாதுகாக்கும் பண்பைத் தமது சிந்தையில் முதன்மையாகக் கொண்டிருந்து இருக்கலாம். குளிர்பதனப் பெட்டிகள் வந்த நாட்களுக்கு முந்திய காலத்தில், இறைச்சி அழுகுதலைத் தாமதப்படுத்த உப்பு பயன்படுத்தப்பட்டது. கலிலேய மீனவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை உப்பிட்டுப் பதப்படுத்தினர். நான் ஆக்லாஹாமாவில் ஒரு சிறுவனாக இருந்தபோது, இறைச்சியானது புத்தம்புதியதாக உண்ணப்படாதபோது, அது நீண்டநாள் கெடாதிருக்க உப்பு பயன்படுத்தப்பட்டது. அதுபோன்றே, கிறிஸ்தவர்கள் இந்த உலகத்திற்கு ஒரு காக்கத்தக்க காரணியாக இருக்கின்றனர். நீதிமான்களான பத்து ஆத்துமாக்கள் இருந்திருந்தால் சோதோம் கொமோராவின் அழிவு தவிர்க்கப் பட்டிருக்கும் (காண்க ஆதியாகமம் 18:32). இன்றைய நாட்களில் நீதிமான்களான ஆண்கள் மற்றும் பெண்கள் இருத்தல் என்பது பாவம் நிறைந்த இந்த உலகத்தின் அழிவைத் தாமதப்படுத்தி பூமியானது கடைசியில் அழிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் மனந்திரும்பக் கால அவகாசம் தருகிறது (2 பேதுரு 3:10).

இந்த உலகம் கெட்டுப்போய்க் கொண்டு இருக்கிறது என்பதை இயேசுவின் வார்த்தைகள் மறைமுகமாய் உணர்த்துகின்றன. இறைச்சியானது அப்படியே விடப்பட்டால் அது கெட்டுப்போவது அதனுடைய இயல்பாக உள்ளது மற்றும் இந்த உலகம் அப்படியே விடப்பட்டால் அது அழிவை நோக்கிச் செல்லுதல் என்பது அதனுடைய இயல்பாக உள்ளது. இந்த உலகம் எவ்வளவு மோசமானதாக முடியும்? ரோமர் 1:18-32 மற்றும் 2 தீமோத்தேயு 3:1-5 ஆகிய வசனங்களை வாசியுங்கள் - அல்லது உங்களைச் சுற்றிலும் கண்ணோக்குங்கள். ஒழுக்கத்தின் தாழ்வான தர அளவைகளை, நேர்மையில் பொதுவான ஒரு குறைவை, உழைப்பின்மீது குறைவான கவனத்தை, அதிகமான தேவபக்தி இல்லாமையை நீங்கள் பார்க்கிறீர்களா?[5] உலகத்தின் இயல்பைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, அது இவ்வளவு மோசமானதாக இருப்பது திகைப்புக்கு

உரியதாக இருப்பதில்லை என்று யாரோ ஒருவர் கூறினார். மாறாக அதைப்பற்றி நல்ல விஷயம் ஏதேனும் இருந்தால், அதுவே திகைப்புக்கு உரியதாக உள்ளது. இந்த உலகத்தில் "உள்ள சில நல்ல விஷயங்கள்" இயேசுவின் செல்வாக்கினாலும் மற்றும் அவரது பின்பற்றாளர்களின் உதாரணத்தினாலும் தான் இருக்கின்றன.

நமது வேதபாட வசனப்பகுதிக்குத் திரும்புகையில் நாம், "உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்?"[6] என்று வாசிக்கிறோம் (மத்தேயு 5:13ஆ). இயேசுவின் இந்தக் கேள்வியைப் புரிந்து கொள்வதற்கு நாம், அவரது நாட்களில் இருந்த உப்பைப் பற்றிய சில விஷயங்களை அறிதல் அவசியமாக உள்ளது. அது நம்மில் பெரும்பான்மையானவர்கள் இன்றைய நாட்களில் பயன்படுத்துகிற, தூய்மையாக்கப்பட்ட சோடியம் குளோரைடு அல்ல. பலஸ்தீனத்திற்கு உப்பானது, "சவக்கடல் தண்ணீர் ஆவியாக்கப்படுகையில் எஞ்சும் எச்சத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட படிகத்தில் இருந்தே முதன்மையாக வந்தது.[7] இந்த உப்பு பலவித வேதிப்பொருட்களையும் அத்துடன் கூடுதலாக அசுத்தங்களையும் உள்ளடக்கி இருந்தது. இது ஈரமாக்கப்பட்டால் சோடியம் குளோரைடு கசியக்கூடும்.[8] எஞ்சியிருப்பது சிறிதளவே சுவையுள்ள மற்றும் பாதுகாக்கும் குணம் எதுவுமற்ற உப்புக்குவியலாக இருக்கும். இதை நாம் "உப்புத்தன்மையற்ற/சாரமில்லாத உப்பு" என்று நினைக்கலாம். சந்தர்ப்பப்பொருளில் கர்த்தர் அனேகமாக, தமது இராஜ்யத்தில் குடிமக்களாக இருந்தும், பாக்கியங்களில் கூறப்பட்ட பண்புகளை இழந்து போயிருப்பவர்களைக் குறிப்பிட்டிருக்கலாம். மனிதர்களுக்கும் உப்பிற்கும் பின்வரும் வேறுபாடு இருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி. "சாரமில்லாத கிறிஸ்தவர்கள்" மனந்திரும்பி, தேவனிடம் திரும்பி மற்றும் தங்கள் "சாரத்தை" மறுபடியும் ஆதாயப்படுத்துக் கொள்ள முடியும்.

"சாரமில்லாத உப்பு" எதற்குப் பயன்படும்? இயேசு, "வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது" என்று கூறினார் (வசனம் 13இ). சிலபொருட்கள் தங்கள் முதன்மை நோக்கத்தை இழந்து போகும்போது, அவைகள் இன்னும் சிலவற்றில் பயனுள்ளவையாக இருக்கின்றன. ஒரு மலர் இறக்கிறபோது, அது இனியும் அழகை அளிப்பதில்லை, ஆனால் அது பூமியில் அல்லது ஒரு கம்போஸ்டு உரக்குவியலில் எறியப்படவும் மண்ணை வளப்படுத்தவும் முடியும். "சாரமற்ற உப்பின்" விஷயம் அப்படியாக இருப்பதில்லை. அது வளமான மண்ணில் இடப்பட்டால், அது மண்ணைப் பலன் தராததாக மாற்றுகிறது. இன்னொரு வேளையில் இயேசு, "அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப் போடுவார்கள்" என்று கூறினார் (லூக்கா 14:35அ, ஆ). அதை அவர்கள் எங்கே எறிகிறார்கள்? கிராமப்பகுதிகளில் குறுக்காகச் செல்லும் பாதைகளில் அதை எறிகிறார்கள். அங்கு அது தீங்கு எதையும் விளைவிப்பது இல்லை, மற்றும் அது "மனுஷரால் மிதிக்கப்படுகிறது."

நன்மைக்கான தமது செல்வாக்கை இழந்து நிற்கும் கிறிஸ்தவரை இயேசு எவ்வாறு விவரிக்கிறார்? அவர் ஒன்றுக்கும் பயனற்றவர் என்று இயேசு கூறினார். கேர்ஸன் என்பவர், "சாரமற்றுப் போனால்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வினைச்சொல் புதிய ஏற்பாட்டில் நான்கு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். அவற்றில் இருமுறைகள் இது உப்புடன் தொடர்புடையதாக உள்ளது, ஆனால் மற்ற இருமுறைகள் "இது

'மதியீனராக்கப்படுதல் அல்லது மதியீனராகுதல்' என்ற மிகச் சாதாரணமான அர்த்தத்தைக் கொண்டுள்ளது." கோர்ஸன், "தங்கள் சாரத்தை இழந்த சீஷர்கள் உண்மையில் தங்களைத் தாங்களே மதியீனராக்கிக் கொள்கின்றனர்" என்று கூறினார்.[9] எவ்வளவு கவலைக்குரிய விஷயம்!

**உலகத்துக்கு வெளிச்சம் (வசனங்கள் 14-16)**

உப்பின் ஒப்புவமை கிறிஸ்தவ செல்வாக்கின் எதிர்மறை மீது முதன்மையாகக் கவனம் குவிக்கிறது. 14ம் வசனத்தில் கிறிஸ்து நேர்மறைப் பக்கமாகத் திரும்பினார். அவ்வசனத்தில் நாம், "கிறிஸ்தவர்களைப்பற்றிக் கூறப்பட்டதிலேயே மிகவும் திகைப்பூட்டுவதும் அசாதாரணமானதுமான கூற்றுக்களில் ஒன்றை" கொண்டுள்ளோம்:[10] "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்!" (வசனம் 14அ). தேவன் ஒளியாக இருக்கிறார் என்று வேதாகமம் போதிக்கிறது: "தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை" (1 யோவான் 1:5). இயேசு தம்மைப்பற்றி "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்று கூறினார் (யோவான் 8:12அ; காண்க 9:5; 12:35, 46; மத்தேயு 4:15). இப்போது, அதே சொல்லாக்கத்தைப் பயன்படுத்தி அவர், தமது சீஷர்களுக்கு "*நீங்கள்* உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று கூறினார். தேவனுடைய பிள்ளைகள் மற்றும் இயேசுவின் சீஷர்கள் என்ற வகையில் நாம், "உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்க" வேண்டியவர்களாக இருக்கிறோம் (பிலிப்பியர் 2:15).[11]

நாம் கொண்டிருக்கும் வெளிச்சம் எதுவாக இருப்பினும், அது நம்மிடத்திலேயே தோன்றியிருப்பதில்லை என்பதை நாம் புரிந்திருக்கிறோம். நமது வல்லமை கர்த்தரிடத்தில் இருந்து வருகிறது. நமது வெளிச்சம் அவரது பிரதிபலிப்பாகவே உள்ளது. எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல், "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்" என்று எழுதினார் (எபேசியர் 5:8). "கர்த்தருக்குள்" என்ற சொற்றொடரை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள்; நாம், "கர்த்தருக்குள்" மாத்திரமே வெளிச்சங்களாக இருக்க முடியும். இயேசு, "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்று கூறியபின்பு, "*என்னைப் பின்பற்றுகிறவன்* இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான்" என்றும் கூறினார் (யோவான் 8:12; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

வெளிச்சம் என்ன செய்கிறது? *இருளை அகற்றுதல்* என்பது அதன் முதன்மை நோக்கமாக உள்ளது. மத்தேயு 5:14ல் இயேசுவின் கூற்று இந்த உலகத்தைப் பற்றி என்ன கூறுகிறது? இந்த உலகம் இருளில் உள்ளது என்று அது அறிவிக்கிறது. உலகம் இதை ஒப்புக்கொள்ள விரும்புவதில்லை; மக்கள் "நாம் ஒளியூட்டப்பட்ட காலங்களில் வாழ்கிறோம்" என்று கூறுவதில் விருப்பம் கொண்டுள்ளனர். இருப்பினும் மனிதகுலம் எங்கிருந்து வந்தது, மனிதகுலம் ஏன் இங்கிருக்கிறது மற்றும் மனிதகுலம் எங்கு செல்கிறது என்பவற்றைப் பற்றி உலகம் கொண்டுள்ள குழப்பங்களைக் கண்ணோக்குங்கள் - இந்தக் கேள்விகளுக்கு வேதாகமம் தெளிவான பதில்களைக் கொண்டுள்ளது. உலகப்பிரகாரமான மனங்கள், இருளின் முக்காட்டை அணிந்துள்ளன. வெளிச்சத்தைப் பற்றிய அறியாமை, விசேஷமாக தேவனுடைய வசனம் என்ற வெளிச்சத்தைப் பற்றிய அறியாமை கொண்டிருத்தலின் விளைவே அந்த இருளில் சில பகுதியாக உள்ளது, மற்றும்

*வெளிச்சத்தை மனப்பூர்வமாக மறுதலித்தல் என்பதன் விளைவாக அந்த இருளின் மற்ற சில பகுதி உள்ளது.*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நம்மால் இயன்ற அளவுக்கு இருளை விரட்டுதலே நமக்கு அறைகூவலாக உள்ளது. வெளிச்சமாக உள்ள தேவனுடைய வசனத்தை (சங்கீதம் 119:105) போதித்தல் மற்றும் பிரசங்கித்தல் என்பது அதைச் செய்வதற்கான வழிகளில் ஒன்றாக உள்ளது. இருப்பினும் நமது வேதபாட வசனப்பகுதியில், இது வசனத்தின்படி வாழுதலுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதே வலியுறுத்தமாக உள்ளது. "நல்ல நடையில்லாத நிலையில் நல்ல வசனம் பலன் ஒன்றும் தருவதில்லை."[12]*

*இருளில் நாம் நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யும்போது, உலகத்தில் உள்ளவர்கள் நம்மைப் பாராட்டுவார்களா? ஒரு சிலர் பாராட்டுவார்கள் - அந்த ஒருசிலருக்காகத் தேவனுக்கு நன்றி! ஆனால் பலர் பாராட்ட மாட்டார்கள். வெளிப்படுத்துதல் என்பது இருளை அகற்றுவதன் ஒரு விளைவாக உள்ளது; பிரகாசமான வெளிச்சத்தில் நாம் பொருட்களை அவற்றின் உண்மை நிலையில் காணுகிறோம். பவுல் "அவைகளெல்லாம் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும்" என்று எழுதினார் (எபேசியர் 5:13அ). இது பாவத்தின் அழகின்மையை வெளிப்படுத்துவதை உள்ளடக்குகிறது,[13] மற்றும் இதை உலகம் வெறுக்கிறது. இயேசு பின்வருமாறு கூறினார்:*

> *ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான் (யோவான் 3:19, 20).*

*''வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கும்'' (எபேசியர் 5:8) இருளின் பிள்ளைகளுக்கும் இடையிலான நேர்மாறு தவிர்க்க இயலாததாக உள்ளது, ஏனெனில் தேவனுக்கு உண்மையாக இருக்கும் பிள்ளைகளின் வாழ்வானது தேவபக்தியற்று வாழ்பவர்களை மௌனமாகக் கடிந்துகொள்ளுவதாக உள்ளது. இது துன்புறுத்தப்படுதலை விளைவிக்கக் கூடும் (மத்தேயு 5:10-12).*

*இருப்பினும் வெளிச்சம் அழகின்மையை வெளிப்படுத்துவதோடு நின்று விடுவதில்லை. அது அந்த அழகின்மையைத் திருத்துவதற்குத் தேவையான ஒளியூட்டுதலை அளிக்கிறது. அது இருளை அகற்றுவதோடு நின்றுவிடுவதில்லை. அது மனிதர்கள் பின்பற்றத் தேவையான பாதை வழியை வெளிப்படுத்துகிறது. ஆகவே கர்த்தர் தம்மைப் பின்பற்றுபவர்களிடத்தில், "உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று பலமாக வற்புறுத்தினார் (வசனம் 16ஆ)!*

*நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்ய அனுமதிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்த, இயேசு இரண்டு விவரிப்புகளைப் பயன்படுத்தினார். முதலாவது, "மலையின்மேல் இருக்கிற பட்டணம்" என்பதாகும். அவர், "மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது" என்று கூறினார் (வசனம் 14ஆ). அந்த நாட்களில் குறைந்தது இரண்டு காரணங்களுக்காக, உயர்ந்த பகுதிகளில்*

நகரங்கள் கட்டி எழுப்பப்பட்டன. விவசாயம் என்பது ஒரு காரணமாக இருந்தது: விவசாயம் செய்யக்கூடிய நிலங்களை தவிர்ப்பதற்காக அவ்வாறு கட்டி எழுப்பப்பட்டன. பாதுகாப்பு என்பது இன்னொரு காரணமாக இருந்தது: உயர்ந்த இடத்தில் உள்ளவற்றைப் பாதுகாத்தல் என்பது மிகச்சுலபமாக இருந்தது. அப்படிப்பட்ட பல நகரங்கள் பாலஸ்தீன நாட்டில் இருந்தன, எனவே இயேசுவின் உரையைக் கேட்டவர்களின்[14] கண்பார்வையில் அப்படிப்பட்ட நகரம் ஒன்று இருந்திருக்கும் என்பதற்கும், அவர் தமது பிரசங்கத்தின் இந்த இடத்தில் தமது கரத்தை அப்படிப்பட்ட நகரத்தை நோக்கி அசைத்திருப்பார் என்பதற்கும் சாத்தியக்கூறு உள்ளது. இந்த விவரிப்பைக் கொண்டு இயேசு கூறவந்த முக்கிய கருத்து எளிமையானதாக உள்ளது: மலையின் மீதுள்ள ஒரு நகரம் மறைந்திருக்க மாட்டாது என்பதைப் போன்றே, நமது கிறிஸ்தவ வெளிச்சமும் மறைக்கப்பட்டிருக்கக் கூடாது, அது பிரகாசித்து இருளை நீக்க வேண்டியதாக உள்ளது.

இயேசுவின் இரண்டாவது விவரிப்பு பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகிறது: "விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல்" (வசனம் 15அ). அந்த நாட்களில் "விளக்கு" என்பது ஒலிவ எண்ணெயால் நிரப்பப்பட்ட ஒரு கோப்பையாக இருந்தது,[15] பெரும்பாலும் இது ஒரு கைக்குள் அடங்கும் அளவுக்கு சிறியதாக இருந்தது. அந்தக் கோப்பையின் முனையானது பொதுவாக, திரியை ஏந்திப் பிடிக்கும் வகையில் ஒருபுறம் சுருட்டப்பட்டதாக இருக்கும்.

"மரக்கால்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, அந்த நாட்களில் இருந்த ஒரு பெரிய அளக்கும் கூடையைக் குறிக்கிறது,[16] ஆனால் அது மிகச்சரியாக என்ன வகையான கூடை என்பது முக்கியமற்றதாக உள்ளது. இந்த விவரிப்பு, ஒரு விளக்கை மூடக்கூடிய ஏதோ ஒரு பொருளை மாத்திரம் குறிக்கிறது. மற்ற சில வேளைகளில் இயேசு, விளக்கு ஒன்றை, படுக்கையின்கீழ் (காண்க மாற்கு 4:21; லூக்கா 8:16) அல்லது மறைவிடத்தில் (லூக்கா 11:33) ஒளித்து வைக்கும் மதியீனத்தைப் பற்றிப் பேசினார்.[17] 13ம் வசனத்தின் சொல்லாக்கத்தைக் கடனாகப் பெறுவதென்றால், மறைவான விளக்கு என்பது ஒரு பயனும் இல்லாததாக உள்ளது. "சாரமற்ற உப்பு" பயனற்றதாக உள்ளது, அதைப்போன்றே "வெளிச்சமற்ற விளக்கும்" பயனற்றதாக உள்ளது.

மக்கள் ஒரு விளக்கைக் கொளுத்தி மரக்காலின் (அல்லது ஒரு மூடப்பட்ட பாத்திரத்தில் அல்லது ஒரு மறைவிடத்தில்) வைக்காதிருந்தால், அவர்கள் அதைக் கொண்டு என்ன செய்வார்கள்? அவர்கள் அதை, "விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்" என்று இயேசு கூறினார் (மத்தேயு 5:15ஆ). "விளக்குத்தண்டு" என்பது விளக்கு அறைப் பகுதி முழுவதையும் ஒளியூட்டக்கூடும்படி உயர்த்தி வைக்கக்கூடிய ஏதோ ஒரு பொருள் ஆகும். அந்தத் தண்டு உலோகத்தினாலே அல்லது மரத்தினாலோ ஆனதாக இருக்கலாம் அல்லது அது சுவற்றில் உள்ள ஒரு எளிய அலமாரியாக அல்லது மாடமாக இருக்கலாம். அந்த நாட்களில் பெரும்பான்மையான வீடுகள் ஒரே ஒரு அறை மாத்திரமே கொண்டவையாக இருந்தன, எனவே ஒரு சிறிய விளக்குகூட "வீட்டில் உள்ள யாவருக்கும்" வெளிச்சம் கொடுப்பதாக இருந்திருக்கும்.

*நமது* விளக்கு வெளிச்சம் தர அனுமதிப்பதற்கான அவசியம் பற்றி

வலியுறுத்த இயேசு தயாராக இருந்தார். அவர், "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" என்று கூறினார் (வசனம் 16). நாம் கர்த்தருக்கு - ஊழியம் செய்வதைக் குறித்து மக்கள் *நம்மை* மகிமைப்படுத்த அல்லது புகழச் செய்யாத வரையிலும் - என்ன செய்கிறோம் என்பதைப் பிறர் அறிய அனுமதிப்பதில் தவறு எதுவும் இல்லை. மத்தேயு சுவிசேஷத்தின் அடுத்த அதிகாரம் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தொடங்குகிறது: "மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" (6:1). விளக்கை நோக்கி எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தல் என்பது விளக்கின் நோக்கமாக இருப்பதில்லை, ஆனால் அது ஒளியூட்டும் பொருளை நோக்கி எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தலே விளக்கின் நோக்கமாக உள்ளது. நான் ஒரு இருட்டான அறைக்குள் சென்று விளக்கை எரிய வைக்கும்போது, நான் எனது கண்களை விளக்குப் பொருத்தப்பட்டிருக்கும் இடத்தை நோக்கித் திருப்புவதில்லை. அதற்குப் பதிலாக நான், அந்த அறையில் அவ்விளக்கு எதை வெளிப்படுத்துகிறது என்பதையே கண்ணோக்குகிறேன்.

நமது வெளிச்சம் ஒரு குறிப்பிட்ட வகையில் பிரகாசிக்க வேண்டும் என்று இயேசு கூறினார்: "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்*படுத்தும்படி*" (மத்தேயு 5:16; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இயேசு வல்லமையான பல செயல்களைச் செய்தார், ஆனால் அவற்றைக் கண்டவர்கள் தேவனை மகிமைப்படுத்தும் "படியாகவே" அவற்றை அவர் செய்தார் (காண்க மத்தேயு 9:8; 15:31). அப்போஸ்தலர்கள் தங்கள் ஊழியங்களை மறைக்க முயற்சி எதையும் மேற்கொள்ள வில்லை, ஆனால் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பிதாவை மகிமைப்படுத்தும் "படியாகவே" அவற்றை அவர்கள் செய்தனர் (காண்க நடபடிகள் 2:43; 5:12). ஃபிராங்க் **L.** காக்ஸ் என்பவர், "சீஷர்கள் இரு மிகைப்பட்ட செயல்களைத் தவிர்க்க வேண்டும்: பகட்டு ஆரவாரம் (மத்தேயு 6:1) மற்றும் பயங்கொள்ளித்தனம்.[18] வெளிச்சமானது வீண் ஆரவாரம் செய்வதுமில்லை, அது தன்னை மறைத்துக் கொள்ள முயற்சி செய்வதுமில்லை" என்று எழுதினார்.[19]

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் ஒருக்காலும் சுயத்தை மேன்மைப்படுத்துபவர்களாக இருக்கக் கூடாது, ஆனால் அதற்கு மாறாக பரலோகத்தில் இருக்கும் நமது பிதாவை மகிமைப்படுத்த வேண்டும். பவுல், "எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" என்று கூறினார் (1 கொரிந்தியர் 10:31). தேவன் நமக்குக் கொடுத்துள்ள தாலந்துகளைப் பற்றிப் பேதுரு எழுதியபோது, நாம் அவைகளை உபயோகிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். "எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" என்று எழுதினார் (1 பேதுரு 4:11இ).

## வேதபாட வசனத்தில் இருந்து கற்றுக்கொள்ளுதல்

*மத்தேயு 5:13-16 வசனப் பகுதியை நாம் ஆராய்ந்து கடந்து செல்லும்போது, கடந்து செல்லுதலில் நாம் ஒரு சில நடைமுறைப் பயன்பாடுகளை ஏற்படுத்தினோம்; ஆனால் நமது வேதபாட வசனப்பகுதியில் இருந்து பல பாடங்களைப் பொறுக்கி எடுக்க முடியும். அவற்றில் சிலவற்றைப் பட்டியலிட என்னை அனுமதியுங்கள். இவற்றில் பல ஒன்றின்மீது இன்னொன்று கவிந்துள்ளன, ஆனால் இவையாவையும் முக்கியமானவையாக உள்ளன.*

### சமூகத்துடன் உறவு

*"சமூகத்துடன் நமது உறவு எவ்வாறாக இருக்க வேண்டும்?" என்பது ஆண்டுகளினூடே கிறிஸ்தவர்களை அக்கறை கொள்ளச் செய்துள்ள கேள்வியாக உள்ளது. அதிகம் அதிகமாகத் தேவபக்தி இல்லாத தன்மை வளருகிற ஒரு உலகத்தை நம்மைச் சுற்றிலும் நாம் காணுகிறோம், மற்றும் நாம் என்ன செய்ய வேண்டும் என்று நாம் வியப்படைகிறோம். இந்தக் கேள்விக்கு சிலர் பின்வரும் பதிலைக் கொடுத்துள்ளனர்: "சமூகத்தை விட்டுத் தள்ளுங்கள். உலகத்தில் இருந்து உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள் மற்றும் அதனுடன் ஏதேனும் இருந்தால், கொஞ்சமே செயல்படுங்கள்." அது இயேசுவின் பதிலாக இருக்கவில்லை. செயல்விளைவில் அவர், "சமூகத்தில் நிலைத்திருங்கள், ஆனால் உப்பாக மற்றும் விளக்காக நிலைத்திருங்கள்" என்றே கூறினார்.*

### சமூகத்தின் மீது செயல்விளைவு

*யாரேனும் ஒருவர், "சமூகத்தில் நிலைத்திருப்பதா? ஆனால் இந்த உலகமானது அதிகமாக அழுகிக் கொண்டிருக்கிறது மற்றும் இருளில் அதிகமாக உழன்றுகொண்டிருக்கிறதே. நாம் செய்யும் எதுவும் அந்தச் செயல்முறையைத் திருப்ப இயலாது என்பது நிச்சயம்!" என்று மறுப்புரை கூறலாம். மத்தேயு 5:13-16ல் இயேசுவின் வார்த்தைகள் எதையேனும் அர்த்தப்படுத்தும் என்றால், அவைகள் கிறிஸ்தவர்கள் சமூகத்தின்மீது ஒரு நேர்மறையான செய்விளைவைக் கொண்டிருக்க* முடியும் *என்று அர்த்தப்படுவதே ஆகும். உப்பு என்ற வகையில் உண்மை நிறைந்த கிறிஸ்தவர்கள், ஒழுக்கரீதியான மற்றும் ஆவிக்குரிய வகையிலான அழிவைக் குறைக்க முடியும், மற்றும் விளக்கு என்ற வகையில் அவர்கள் ஆவிக்குரிய இருளை அகற்ற முடியும். நாம் சிறுபான்மையினராக இருந்தபோதிலும், மற்றும் நாம் துன்புறுத்தப்பட்ட போதிலும் (வசனங்கள் 10-12), நாம் உதவியற்றவர்களாகவோ அல்லது வல்லமையற்றவர்களாகவே இருப்பதில்லை.*

### தனித்தன்மை கொண்டிருப்பதற்கான அவசியம்

*உலகத்தில் நாம் விரும்பும் செயல்விளைவைக் கொண்டிருக்க, நாம் இந்த உகலத்தில் இருந்து வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும். நாம் தனித்தன்மை வாய்ந்தவர்களாக, "உலகத்தால் கறைபடாதபடி" (யாக்கோபு 1:27) இருக்க வேண்டும். உப்பானது இறைச்சியைப் போலவே வேதிப்பொருள்களின் கூட்டமைப்பைக் கொண்டிருக்கும் என்றால், அது இறைச்சியைக் கெட்டுப் போகாதபடி பாதுகாக்க முடியாது. வெளிச்சமானது இருளைப் போன்றே இருக்கும் என்றால், அது இருளை அகற்ற முடியாது. இன்றைய நாட்களில் மிகவும்*

அடிக்கடி, கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு இடையிலான பிரிவுக்கோடானது மிகவும் தெளிவற்றதாகி விடுகிறது. பச்சோந்தி என்று அழைக்கப்படும் பல்லி இனத்தைச் சேர்ந்த ஊரும் பிராணி ஒன்றுள்ளது. அது தான் இருக்கும் பின்னணிக்கு ஏற்ப தனது நிறத்தை மாற்றக் கூடியதாக உள்ளது. "பல பச்சோந்திக் கிறிஸ்தவர்களை" நாம் கொண்டிருக்கிறோம், அவர்கள் இந்த உலகத்துடன் கலந்து இருக்க முயற்சி செய்கின்றனர். நாம் "உலகத்தில் இருந்தாலும்" (யோவான் 17:11), நாம் "இந்த உலகத்தைச் சார்ந்தவர்களாக" இருக்கக் கூடாது (வசனங்கள் 14, 16).

### தைரியத்திற்கான அவசியம்

ஏற்கனவே குறிப்பிடப்பட்டபடி, நாம் சமூகத்தில் இருந்து நம்மை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கர்த்தர் நோக்கங் கொண்டிருக்கவில்லை. இயேசுவின் நாட்களின்போது, தங்களை "வெளிச்சத்தின் பிள்ளைகள்" என்று அழைத்துக்கொண்ட எஸ்ஸென்ஸ் என்ற ஒரு பிரிவினர் இருந்தனர்.[20] இருப்பினும் அவர்களில் சிலர் தங்களைச் சமூகத்தில் இருந்து விலக்கிக் கொண்டு சவக்கடலின் மேற்குப் பகுதியில் இருந்த ஒரு ஒதுக்குப்புறமான பகுதியில் வாழ்ந்தனர்.[21] அவர்களின் வெளிச்சம் உலகத்தில் பிரகாசிக்க வாய்ப்பின்றிப் போனது. நீங்களும் நானும் அந்த மிகையளவிற்குச் செல்லாதிருக்கலாம், ஆனால் நமது உப்பு-மற்றும் - வெளிச்சம் என்ற வகையிலான செயல்பாடுகளை சபைக் கட்டிடத்தில் ஆராதனை ஊழியங்களுடன் மாத்திரம் கட்டுப்படுத்திக் கொள்வதற்குச் சாத்தியக் கூறு உள்ளது. இயேசு, "நீங்கள் சபைக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று அல்ல ஆனால் "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்றே கூறினார். ஒரு பீப்பாயில் உப்பையும் இன்னொரு பீப்பாயில் இறைச்சியையும் வைத்தல் என்பது, இறைச்சியின் மீது கெட்டுப் போகாமல் பாதுகாக்கும் செயல்விளைவு எதையும் கொண்டிருக்காது.[22] இறைச்சியைக் கெட்டுப்போகாமல் பாதுகாப்பதற்கு, இறைச்சி இருக்கும் இடத்தில் உப்பு இருக்க வேண்டும்.

சமூகத்தின் மீது செல்வாக்கைக் கொண்டிருக்க, தைரியத்தின் ஒரு கூறு தேவைப்படுகிறது. நாம் எங்கு இருந்த போதிலும், நாம் உப்பாக இருத்தல் அவசியமாயிருக்கிறது:[23] கடைவீதியில், அயலகத்தவர் அல்லது நண்பருடன் பேசிக்கொண்டிருக்கையில், நாம் சந்திக்கும் மக்களுடன் செயல்படுகையில். எல்லா வேளையிலும் மற்றும் எல்லா இடத்திலும் நாம் நமது வெளிச்சத்தைப் பிரகாசிக்க அனுமதிக்க வேண்டும். குழந்தைகளுக்கான பாடல் ஒன்று, "நீங்கள் இருக்கும் மூலையை வெளிச்சமாக்குங்கள்" என்று கூறுகிறது.[24] உங்கள் இல்லத்தை ஒளியூட்டுங்கள். நீங்கள் போய்வரும் பள்ளியை ஒளியூட்டுங்கள். "நீங்கள் இருக்கும் மூலையை தைரியமாக ஒளியூட்டுங்கள்."

### தனிப்பட்ட பொறுப்பு

அடுத்த பாடம் சுயமாகவே தெளிவானதாக இருக்க வேண்டும், ஆனால் இது இன்னும் குறிப்பிடத் தகுதியானதாக உள்ளது: *ஒவ்வொரு கிறிஸ்தவரும் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்று இயேசு நோக்கங்கொண்டார்.* சிலர் தங்களுக்குச் செல்வாக்கு இல்லை என்று நினைக்கின்றனர். அவர்கள், "நான் செய்வது அல்லது கூறுவதை எவரொருவரும் கவனம் செலுத்துவதில்லை" என்று வலியுறுத்துகின்றனர். ஜார்ஜ் பெய்லீ

என்பவர், "மிகச்சிறிய முடியும்கூட ஒரு நிழல் விழச் செய்கிறது. தண்ணீரில் வீசி எறியப்படும் மிகச்சிறிய கூழாங்கல் கூட சிற்றலைகளை உருவாக்குகிறது. அதுபோன்றே நாம் யாவருமே செல்வாக்குக் கொண்டிருக்கிறோம்" என்று கூற விருப்பம் கொண்டுள்ளார்.

"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்றும் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றும் இயேசு யாருக்குக் கூறினார்? இந்தக் கூற்றுக்களை அவர், கிரேக்கத் தத்துவஞானிகளுக்கோ அல்லது ரோமானியத் தலைவர்களுக்கோ கூறவில்லை. இந்த வார்த்தைகளை அவர் பலஸ்தீனநாட்டின் கல்வியறிவும் கலாச்சார மேம்பாடும் கொண்டவர்களிடத்தில் பேசவில்லை. (கலிலேயர்கள் அறியாமையும் அநாகரிகமும் உடையவர்கள் என்று யூதேயாவில் இருந்த யூதர்கள் நினைத்தனர் [காண்க யோவான் 1:46].) சாதாரண மக்களிடத்தில் இந்தக் கூற்றுக்களை இயேசு கூறிக்கொண்டிருந்தார்: கல்வி அறிவற்ற மீனவர்கள், விவசாயிகள் மற்றும் சிறுநகரவாசிகள். செயல்விளைவில் அவர், *ஒவ்வொரு* கிறிஸ்தவரும் - திரும்பக்கூற என்னை அனுமதியுங்கள், *ஒவ்வொரு* கிறிஸ்தவரும் - பூமிக்கு உப்பாகவும் உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருப்பதாக அறிவித்தார். கிரேக்க வசனத்தில் 13 மற்றும் 14 ஆகிய இரு வசனங்களிலுமே, "நீங்கள்" என்ற வார்த்தையின்மீது வலியுறுத்தம் உள்ளது. இது, இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை நோக்கி, "*நீங்கள் - நீங்கள் எல்லாரும் மாத்திரம்* - பூமிக்கு உப்பாகவும் உலகத்திற்கு வெளிச்சமாகவும் இருக்கிறீர்கள்!" என்று கூறியது போன்றுள்ளது.

**"ஒரு எச்சரிக்கைப் பட்டி"**

சில உற்பத்திப் பொருள்களில், அவற்றின் குறிப்பிட்ட சில பகுதிப்பொருள்கள் ஒருவரின் உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கலாம் என்ற பட்டிகள் கொண்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. துன்புறுத்தப்படுதல் பற்றிய அவரது வார்த்தைகளைத் தொடர்ந்து உடனடியாக (5:11, 12), இயேசுவின் சீஷர்கள் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்ற அவரது விவரிப்பு வருகிறது.[25] 11 மற்றும் 12 ஆகிய வசனங்கள் செயல்விளைவில், உப்பாகவும் வெளிச்சமாகவும் இருத்தல் நமது உடல் ஆரோக்கியத்திற்குத் தீங்கிழைப்பதாகலாம் என்று கூறும் எச்சரிக்கைப் பட்டியாக உள்ளது. முன்பே குறிப்பிடப்பட்டபடி, வெளிச்சம் என்பது தவறுகளையும் குறைகளையும் வெளிப்படுத்துகிறது, மற்றும் அதைக்குறித்து இந்த உலகம் சினங்கொள்கிறது. வெளிச்சம் என்பது அதன் இயல்பினாலேயே, தெளிவாக மற்றும் காணப்படக் கூடியதாக இருப்பதால், இந்த உலகமானது தனது எரிச்சலுக்கான ஆதார மூலத்தை அறிகிறது. உலகமானது, தனது தவறுகளைத் திருத்திக்கொண்டு தனது குறைகளை நிறைவாக்குதலுக்கு மாறாக, வெளிச்சத்தை அணைத்துப்போட முயற்சி செய்வதை மிகச்சுலபமானதாக காண்கிறது. இது, நாம் நமது வெளிச்சத்தை மறைக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறதா? இல்லை! அபாயத்தைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார், ஆனால் நாம், பின்வரும் அதே நிலையில் நிலைத்திருக்க வேண்டும் என்பது அவர் நமக்கு விடும் அறைகூவலாக உள்ளது: "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது."

# முடிவுரை

நீங்களும் நானும், இயேசுவின் பின்வரும் வார்த்தைகளில் கண்டறிவதைக் காட்டிலும் பெரிதான பாராட்டையோ அல்லது பெரிதான அறைகூவலையோ ஒருக்காலும் பெற்றுக்கொள்வதில்லை: "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; ... நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத்தேயு 5:13அ, 14அ). இயேசுவைப் பின்பற்றுவதாக உரிமைகோருபவர்கள் யாவரும் இந்தப் பணிகளை நிறைவேற்றினால், அது இந்த உலகத்தின்மீது ஏற்படுத்தும் செயல்வலிவை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? ஒரு பழங்காலக் கூற்று, "சபையானது ஒரே ஒரு நாள் முழுவதும் தனது அழைப்பிற்கு ஏற்ப உண்மையாகவே வாழ்ந்தால், அந்த நாளின் இரவுப்பொழுது வருவதற்குள் இந்த உலகம் முழுவதும் மனம் மாறிவிடும்" என்று உரிமைகோரியது.[26] நாம் எல்லாரும் "பூமிக்கு உப்பாக" மற்றும் "உலகத்திற்கு வெளிச்சமாக" இருக்கத் தேவன் நமக்கு உதவுவாராக!

---

குறிப்புகள்:

[1]செல்வாக்கு மற்றும் உதாரணம் ஆகியவற்றை எடுத்துரைக்கும் பிற வசனப்பகுதிகளில், நீதிமொழிகள் 22:1; மத்தேயு 13:33; 1 கொரிந்தியர் 10:11 மற்றும் யாக்கோபு 5:10 ஆகியவை உள்ளடங்குகின்றன. [2]இந்தக் கருத்திற்காக நான் எனது சகோதரர் காய் ரோப்பருக்குக் கடன்பட்டுள்ளேன். (Coy Roper, "How to Find Happiness," sermon preached at Trent church of Christ, Trent, Texas, 1 January 2006.) [3]*Natural History* 31.102. Quoted in D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 138. [4]Harold Hazelip, *Discipleship,* The 20th Century Sermons Series (Abilene, Tex.: Biblical Research Press, 1977), 56. [5]இந்த வாக்கியத்தை நீங்கள் வாழும் சமூகத்தில் உள்ள ஒழுக்கம் சார்ந்த பிரச்சனைகளுக்குப் பொருந்திவரும்படி தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [6]இது பதில் அளிக்க வேண்டும் என்று அர்த்தப்படாத சொற்திறம் வாய்ந்த ஒரு கேள்வியாக உள்ளது. உப்பு அல்லாத உப்பு மீண்டும் உப்பாக்கப்பட இயலாது. [7]Harold Fowler, *Matthew I,* Bible Study Textbook Series (Joplin, Mo., College Press, 1968), 233. [8]சில வேளைகளில் பெரிய அளவில் உப்பு கட்டிடங்களின் மண்தரைகளில் சேமிக்கப்பட்டு, அங்கு உப்பின் பண்பை ஈரப்பதம் பாதிப்பது உண்டு. [9]Carson, 139. [10]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 159.

[11]கிறிஸ்தவர்கள் வெளிச்சமாக இருப்பதைக் குறித்து, யோவான் 12:36; எபேசியர் 5:6-14; பிலிப்பியர் 2:14-16; 1 தெசலோனிக்கேயர் 5:4-8 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும். [12]Rudolf Stier, *The Words of the Lord Jesus,* vol. 1, trans. William B. Pope (Philadelphia: Smith, English, and Co., 1859), 124. [13]1 கொரிந்தியர் 4:5ல் பவுல், கர்த்தர் மறுபடியும் வரும்போது வெளிப்படுத்தப்பட இருக்கும், "இருளில் மறைந்திருக்கிறவைகளை"ப் பற்றிப் பேசினார். [14]மலைப்பிரசங்கம் செய்யப்பட்டதாகப் பாரம்பரியமாகக் கருதப்படும் இடத்திற்கு அருகாமையில் அப்படிப்பட்ட நகரம் ஒன்றின் சிதிலங்கள் இருக்கின்றன. [15]KJV வேதாகமத்தில் மெழுகுவர்த்தி என்று அர்த்தப்படும் "candle" என்ற வார்த்தை உள்ளது, ஆனால் "கிறிஸ்துவின் காலத்திற்குச் சற்றுப் பின்னர் வரையிலும்கூட மெழுகுவர்த்திகள் அறியப்படவில்லை" (J. W. McGarvey, *The New Testament Commentary Vol. 1 - Matthew and Mark* [N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., 2006], 52). NKJV வேதாகமத்தில் விளக்கு என்று அர்த்தப்படும் "lamp" என்ற வார்த்தை உள்ளது. [16]எனது

NASB வேதாகமப்பிரதியில் பின்வரும் குறிப்பு உள்ளது: "பக்கா - அளவை." "பக்கா" என்பது எட்டு குவார்ட்டுகளுக்கு 7.57 லிட்டர்களுக்கு சமமான உலர் அளவையின் அலகு ஆகும். (*The American Heritage Dictionary,* 4th ed. [2001], s.v. "peck.") [17]லூக்கா 11:33ல் உள்ள நேரடி கிரேக்க வார்த்தை "மறைவிடம்" என்பதாக உள்ளது. [18]பயங்கொள்ளித்தனமாக (கோழைத்தனமாக, பயந்த சுபாவமாக) இருத்தல் பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 21:8ஐக் காணவும். [19]Frank L. Cox, *Sermon Notes on The Sermon on the Mount* (Nashville: Gospel Advocate Co., 1955), 11. [20]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1978), 65.

[21]இது புகழ்பெற்ற சவக்கடல் சுருள்கள் கண்டறியப்பட்ட கும்ரான் சமூகத்தின் வாழ்விடமாகும். [22]Clovis G. Chappell, *The Sermon on the Mount* (Nashville: Abingdon-Cokesbury Press, 1930), 127. [23]இந்தப் பத்தியை நீங்கள் வாழும் சமூகத்திற்குப் பொருத்தமான வகையில் தழுவியமைத்துக் கொள்ளுங்கள். [24]"எனது இந்தச் சிறு விளக்கு" என்பது பொருத்தமான இன்னொரு குழந்தைகளுக்கான பாடல் ஆகும். [25]11 மற்றும் 12 ஆகிய வசனங்களிலும் மற்றும் 13முதல் 16வரையிலான வசனங்களிலும் ("நீங்கள்" என்ற) முன்னிலைப் பெயர்ச்சொல் பயன்படுத்தப் பட்டுள்ளதைக் கவனியுங்கள். இவ்விரு பகுதிகளும் இயேசுவின் சீஷர்களுக்கு நேரடியாக உரைக்கப்பட்டன. [26]Hazelip, 53.

## மோசேயும் இயேசுவும்:<br>இரு மலைகளில் இருந்து ஒரு பிரசங்கம்?

மத்தேயு 5:21ல் இயேசு, பத்துக் கட்டளைகளில் ஆறாவது கட்டளையைக் குறிப்பிட்டார்: "கொலை செய்யாதிருப்பாயாக" (காண்க யாத்திராகமம் 20:13). 27ம் வசனத்தில் அவர் ஏழாவது கட்டளையை மேற்கோள் காண்பித்தார்: "விபசாரம் செய்யாதிருப்பாயாக" (காண்க யாத்திராகமம் 20:14). இவ்விரு விஷயங்களிலும், பின்பு அவர், "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறினார் (மத்தேயு 5:22, 28). இது எழுத்தாளர்களை, மோசேக்கும் இயேசுவுக்கும் இடையிலும், சீனாய் மலையிலும் பலஸ்தீனத்தில் உள்ள பெயர்குறிப்பிடப் படாத ஒரு மலையிலும் இருந்து அவர்கள் கூறிய வார்த்தைகளுக்கு இடையிலும், இணைக் கருத்துக்களையும் நேரெதிர்க் கருத்துக்களையும் கண்டறியத் தூண்டியுள்ளது.

- இயேசு, மோசேயைப் "போன்ற தீர்க்கதரிசி" என்று அழைக்கப்பட்டார் (உபாகமம் 18:15; காண்க நடபடிகள் 3:20, 22).
- இருவருமே மலையின் மீது ஏறிச் சென்றனர் (காண்க யாத்திராகமம் 19:20, 25; மத்தேயு 5:1).
- மோசே தேவனுக்காகப் பேசி, மக்கள் தேவனுடனும் ஒருவர் மற்றவருடனும் எவ்வாறு உறவு கொாண்டிருக்க வேண்டும் என்பதற்கான அடிப்படைக் கொள்கைகளை வரைகுறிப்பிட்டார் (யாத்திராகமம் 20:1-17), மற்றும் இயேசு தமது புதிய உடன்படிக்கைக்காக அதே செயலைச் செய்தார் (மத்தேயு 5; 6; 7).

மற்ற ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் உள்ளன. ஃபிராங்க் L.

காக்ஸ் அவர்கள், "பத்துக் கட்டளைகளை அறிவித்த, சீனாய் மலையின் கொடுமுடியிலிருந்து புறப்பட்ட இடிமுழக்கங்கள், கலிலேயாவின் மலையிலிருந்து, பாக்கியங்கள் பெறத்தேவையான தேவபக்தியை அறிவித்த இயேசுவின் மென்மையான வார்த்தைகளுக்கு, மனதில் பதியக்கூடிய நேரெதிர் வடிவத்தைக் கொண்டுள்ளன" என்று எழுதினார்.[1]

இருப்பினும் மத்தேயு 5ஐப் பற்றிய நமது வாசிப்பை நாம் தொடருகிறபோது, பத்துக் கட்டளைகளில் வேறு எதுவும் மேற்கோள் காண்பிக்கப்படுவதை நாம் கண்டறிவதில்லை. மாறாக நாம், பழைய ஏற்பாட்டின் மற்ற மேற்கோள்களையும் பழைய ஏற்பாட்டு வேதவசனங்களில் தொகுப்புரைகளையும் நாம் கண்டறிகிறோம். பழைய ஏற்பாட்டிற்கு முற்றிலும் எதிரான ஒரு கூற்றைக்கூட நாம் கண்டறிகிறோம்: "உன் சத்துருவைப் பகைப்பாயாக" (வசனம் 43).

சீனாய் மலையில் தரப்பட்ட மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கும் இயேசுவின் மலைப் பிரசங்கத்திற்கும் இடையில் நேரெதிர்க்கருத்து எதுவும் இருப்பதில்லை. அதற்குப்பதிலாக, பழைய ஏற்பாடு போதித்ததைப் பற்றி மக்கள் என்ன *நினைத்தனர்* என்பதற்கும் தேவன் தமது கட்டளைகளைக் கொடுத்ததில் உண்மையில் அவரது நோக்கம் என்னவாக இருந்தது என்பதற்கும் இடையில்தான் நேரெதிர் கருத்து உள்ளது. குறிப்பாக, நியாயப்பிரமாணம் பற்றி வேதபாரகரும் பரிசேயரும் என்ன கூறினர் என்பதற்கும் (வசனம் 20) தேவனுடைய தோற்றக்கால விருப்பநோக்கம் என்னவாக இருந்தது என்பதற்கும் இடையில்தான் நேரெதிர்க் கருத்து இருந்தது.

---

குறிப்பு

[1]Frank L. Cox, *Sermon Notes on The Sermon on the Mount* (Nashville: Gospel Advocate Co., 1955), 9.